ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# தனியன்

(ஸ்ரீ உ.வே. சந்தானம் ஐயங்கார் ஸ்வாமி, செகந்திராபாத்)

---

நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களில் ஒவ்வொரு ப்ரபந்தத்தின் தொடக்கத்திலும், ஒன்றிரண்டு பாசுரங்கள் (பாடல்கள்) "தனியன்" என்ற பெயரில் அமைந்திருக்கின்றன. ப்ரபந்தத்தை ஸேவிக்கத் தொடங்கும் முன் இந்தத் தனியன்களை ஸேவித்து, பிறகு ப்ரபந்தத்தைத் தொடங்குவது ஸம்ப்ரதாயம்.

**தனியன் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன?**

தமிழில் "பாயிரம்" என்று சில பாடல்கள் இலக்கண ரீதியாக உண்டு. இதையே வைணவ ஸம்ப்ரதாயத்தில் "தனியன்" என்று கூறுகிறோம்.

எந்த ப்ரபந்தத்தை (நூலை) இயற்றினாலும் அல்லது படித்தாலும்/ ஸேவித்தாலும், பாயிரம் (தனியன்) உரைத்த பிறகே ப்ரபந்தம் ஸேவிக்கத் தொடங்கவேண்டும் என்பது மரபு. அதாவது பாயிரம் (தனியன்) இல்லாத நூலே இருக்கமுடியாது. இருக்கக் கூடாது.

"ஆயிரம் முகத்தான் அகன்றதாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே" என்பது இலக்கண நியதி.

"பாயிரம்" (தனியன்) நூலின் எண்ணிக்கைக்குள் அடங்காது. தனித்து நிற்கும். அதுபற்றியே "தனி" என்ற பகுதியின் மேல் "அன்" என்ற ஆண்பால் விகுதியைச் சேர்த்து "தனியன்" என்று வழங்குகிறோம்.

பாயிரம் (தனியன்), தற்சிறப்புப் பாயிரம், சிறப்புப் பாயிரம், பொதுப்பாயிரம் என மூவகைப்படும்.

1. தற்சிறப்புப் பாயிரம் - நூலாசிரியர், தான் இயற்றிய நூலை/பாடல்களைப் பற்றித் தானே எழுதுவது (கூறுவது). 'கடவுள் வாழ்த்து' என்பதும் இதில் அடங்கும்.

2. சிறப்புப் பாயிரம் - நூலாசிரியரைச் சேர்ந்த மாணாக்கனாலோ ஆசிரியனாலோ அல்லது அந்த நூல் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பாண்டித்யம் உள்ளவர்களாலோ புனையப்படுவது.

3. பொதுப்பாயிரம் - நூலைச் சிறப்பித்துக் கூறுவது, அறிமுகம் செய்வது, நூலாசிரியரையும் அவர் பிறந்த ஊர் முதலியவைகளையும் சிறப்பித்துக் கூறுவது என்ற அளவில் நிற்கும். நூலின்/ப்ரபந்தத்தின் மீது பெருமதிப்புக் கொண்ட எவரும் பொதுத் தனியன் இயற்றலாம்.

*****************************

ப்ரதி அருளியமைக்காக அநந்தகோடி க்ருதஜ்ஞதாரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்: ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம். ஜகன்னாத தாதாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி.